### அர்ச். மாற்கு சுவிசேஷம் 11:24

ஆதலால் நீங்கள் ஷெஜபம் பண் ணும் போது கேட்கிறதையெல்லாம் பெற்றுக்கொள்வீர்களென்று விசுவசி யுங்கள். அவைகள் உங்களுக்குச் சம்ப விக்குமென்று உங்களுக்குச் சொல்லு கிறேன். (மத். 7:7; 21:22; அரு. 14:13.)

### கொலோசியர் 3:23-24

நீங்கள் எதைச் செய்தாலும், மனிதருக்கென்று செய்யாமல், ஆண்டவருக்கென்று மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். ஆண்டவரிடத்தில் சுதந்திரத்தின் சம்பாவனையைப் பெற்றுக்கொள்வீர்களென்று அறிந்து, கிறீஸ்துநாதருக்கு ஊழியஞ்செய்யுங்கள். ழுழுழு 23,24. உரோமையர்களுக்குள் அடிமைகள் என்ன வேலை செய்தாலும் அவர்களுக்குச் சுதந் திரமென்று ஒன்றுமில்லை. சர்வேசுரனுடைய ஊழியர்களாகிற கிறீஸ்தவர்கள் எவ்விதத் தாராயிருந்தாலும் ஆண்டவருடைய இராச்சியத்துக்குச் சுதந்திரக்காரராயிருக்கிறார்கள்.

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 16:24

இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றையும் கேட்கவில்லை. கேளுங்கள், உங்கள் சந்தோஷம் பூரணமாகும்பொருட்டு பெற்றுக் கொள்வீர்கள்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 7:7

கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். (மத். 21:22; மாற். 11:24; லூக். 11:9-13.)

### இயாகப்பர் பொது நிருபம் 1:5

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால், கடிந்து கொள்ளாமல் யாவருக்கும் ஏராளமாய்க் கொடுக்கிற சர்வேசுரனிடத்தில் கேட்கக்கடவான். அப்போது அவனுக்குக் கொடுக்கப்படும். (மத். 7:7.)

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 6:38

கொடுங்கள், உங்களுக்கும் கொடுக் கப்படும்; அமுக்கவும் குலுக்கவும்பட்டுச் சரிந்துவிழும் நல்ல அளவை உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில் நீங்கள் அளந்த அளவினாலேயே உங்களுக்கும் பதில் அளக்கப்படும் என்றார். (மத். 7:2; மாற். 4:24.)

சங்கீதங்கள் 143:6

மின்னல்களை மின்னப் பண் ணும்; அவர்களைச் சிதற அடிப்பீர்; உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்க அடியும்.

கொரிந்தியர் 2 9:8

மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் உங்களுக்குப் போதுமான யாவற்றையுங் கொண்டிருந்து, எவ்வித நற்கிரியைகளிலும் சம்பூரணமுள்ளவர்களாகும்படி சர்வேசுரன் உங்களிடத்தில் எவ்வித நன்மைகளையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:6

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர் கள் பாக்கியவான்கள்: ஏனெனில் அவர்கள் திருப்தியடைவார்கள். (லூக். 6:21.) மூ 6. நீதி:- நீதியென்றால் புண்ணிய சாங்கோபாங்க நெறியாகும்; வேதாகமத்தில் நீதி என்னும் இச்சொல் இந்த அர்த்தத்திலே பல இடங்களில் வழங்குகிறது.

அருளப்பர் முதல் நிருபம் 2:27

அவராலே நீங்கள் பெற்றுக் கொண்ட அபிஷேகம் உங்களிடத்தில் நிலைத்திருப்பதாக. அப்பொழுது ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டிய தில்லை. அவருடைய அபிஷேகம் சகலத் தையும்பற்றி உங்களைப் படிப்பிப்பதி னாலே, அந்தப் படிப்பினை உண்மையுள் ளதும் பொய்யற்றதுமாயிருக்கின்றது. அது உங்களைப் படிப்பித்தபடியே அவரிடத்தில் நிலைக்கொள்வீர்களாக.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 10:8

நோயாளிகளைக் குணமாக்குங் கள், மரித்தோரை உயிர்ப்பியுங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குங்கள்; பசாசுகளை ஓட்டுங்கள். இலவசமாய்ப் பெற்றுக்கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.

உரோமாபுரியார் 1 8:32

தமது சொந்தக் குமாரன்மேல் முதலாய் இரக்கமில்லாமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் மற்றெல்லாவற்றையும் அவரோடு நமக்குத் தானம் பண்ணாதிருப்பதெப்படி? (அரு. 3:16.)

அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:32

நாங்களும், சர்வேசுரனுக்குக் கீழ்ப்படிகிற சகலருக்கும் அவர் தந் தருளின இஸ்பிரீத்துசாந்துவானவரும், இந்தச் சங்கதிகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறோம் என்றார்கள்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 4:14

ஆனால் நான் அவனுக்குக் கொ டுக்கும் ஷஜலம் அவனிடத்தில் நித்திய ஷஜீவியத்துக்குப் பாய்கிற நீருற்றாகும் என்றார்.

கொரிந்தியர் 2 4:16

இதனிமித்தம் நாங்கள் மனச் சோர்வு அடைவதில்லை. ஏனெனில் நமது புறத்து மனிதன் அழிந்தாலும், உள்ளத்து மனிதன் நாளுக்குநாள் புதுப்பிக்கப்படுகிறான்.

உரோமாபுரியார் 1 5:5

நம்பிக்கையோவென்றால் நம்மை வெட்கிப்போகப்பண்ணாது. ஏனெனில் நமக்கு அளிக்கப்பட்ட இஸ்பிரீத்து சாந்துவினாலே தேவசிநேகம் நம் முடைய இருதயங்களில் எப்பக்கத் திலும் பொழியப்பட்டிருக்கிறது.

சங்கப் பிரசங்கியாகமம் 3:12-13

என் வாழ்நாட்களில் மகிழ் வதையும் நன்மை செய்வதையும் பார்க்கிலும் நலமானதொன்று மில்லை என்றறிந்தேன். ஏனெனில் எவன் புசித்துக் குடித்துத் தன் பிரயாசத்தால் உண் டான நன்மையைப் பார்ப்பது அவனுக்கு தேவன் தந்த வரம்.

இராயப்பர் பொது நிருபம் 2 1:3

தம்முடைய சுய மகிமையாலும் கருணையாலும் நம்மை அழைத்தவரை அறியும் அறிவினால் ஷஜீவியத்துக்கும் தேவபக்திக்கும் வேண்டியவைகள் யாவும் அவருடைய தெய்வீக வல்லமை யால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. (1 இரா. 2:9; 2 கொரி. 4:6.)

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 16:7

அப்படியானாலும் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கின் றது. ஏனெனில் நான் போகாதிருந்தால், தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில், அவரை உங்களி டத்தில் அனுப்புவேன். (அரு. 14:16, 26.)

சங்கப் பிரசங்கியாகமம் 5:19

தேவன் அவனுடைய இருத யத்திற்கு இன்பத்தைத் தந்தருளின படியால் அவன் தன் உயிர் நாட் களை அதிகமாய் நினையான்.

எபேசியர் 1:18

அவர் நம்மை அழைத்ததில் நமக்குண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், அர்ச்சிக்கப்பட்டவர்களுக்கு அவர் நியமித்திருக்கிற சுதந்திரமாகிய மகிமையின் ஐசுவரியம் ஏதென்றும்,